**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 77/2026**
**U/s. 406,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : சத்யா | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**2** வது எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 77/2026 07.03.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.59 FN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் கீழவாசலில் குடியிருந்து வருகிறேன். நான் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் துப்புரவு பணியாளராக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் எனது மகன் செந்தில்குமார் என்பவருக்கு முனிசிபால்டி அல்லது வேறு ஏதாவது ஒரு அலுவலகத்திலோ வேலை வாங்கி தருவதாக கூறியதற்கு காமராஜரும், ராமச்சந்திரனும் என்னிடம் பணம் கேட்டார்கள். காமராஜ் எனக்கு தரவேண்டிய ரூ. 3,30,000/- பணத்தை தந்துவிட்டார். தற்போது நாங்கள் சமாதானமாக சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையதுதான். **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை தஞ்சாவூர் மாவட்ட குற்ற பிரிவு திரு. செல்வம் அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 28 ஆண்டுகளாக தஞ்சாவூர் சச்சினாந்த மூப்பனார் ரோட்டிலுள்ள அரசு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் துப்பரவு பணியாளராக வேலை செய்து கடந்த 5 மாதங்களுக்கு முன்பாக பணி மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்று எனது கணவர் செல்வராஜ் உடல் நிலை காரணமாக இறந்துவிட்டார். எனது மகன் செந்தில் குமார் MA படித்து முடித்து விட்டு தனியார் நிறுவனத்தில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்து வருகிறார். என்னுடன் பணிபுரிந்த காமராஜ் என்பவர் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் தோட்ட வேலை செய்து வருகிறார். ராமச்சந்திரன் என்பவர் அங்கே சமையல்காரராக வேலை செய்தார். ராமச்சந்திரனுக்கும் பணி மாறுதல் காரணமாக கடலூர் சிறுவர் சீர்திருத்த

பள்ளிக்கு சென்றதால் என்னுடன் வேலை பார்த்த காமராஜ் எனது மகன் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவது தெரிந்து கொண்டு ஏன் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறாய் நம்முடன் பணிபுரிந்த ராமச்சந்திரன் என்பவருக்கு பெரிய அதிகாரியுடன் நல்ல பழக்கம் இருப்பதாக அவர் மூலமாக மகனுக்கு முனிசிபால்டி இல்லையெனில் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் நல்ல வேலை வாங்கிதருவதாக அதற்கு அதிகாரிகளுக்கு பணம் கொடுக்க வேண்டும் என கூறினார்கள். அவர்கள் கூறிய நம்பிகையான வார்த்தை மற்றும் ஆசை வார்த்தைகளால் உண்மை என நம்பி எனது சிறு சேமிப்பு கணக்குகளில் 2019 செப்டம்பர் மாதம் காமராஜ் ரூ. 1,40,000/– பணத்தை சிறுவர் சீர்திருத்த பள்ளி வளாகத்தில் அவரிடம் ரொக்கமாக கொடுத்தேன். நான் காமராஜிடம் பணம் கொடுத்த பிறகு எனது மகனை அழைத்து கொண்டு கடலூரில் வேலை பார்க்கும் ராமச்சந்திரனை பார்த்து வந்ததாகவும், அதன் பிறகு என்னிடம் ராமச்சந்திரன் பணம் கேட்கும்போதெல்லாம் என்னிடமிருந்த ரூ. 1,90,000/– பணத்தை கடந்த 2024 வரை கையிலிருந்த பணத்தையும், ராமசந்திரன் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன். வேலை வாங்கி தருவதாக நம்ப வைத்து ஆசை வார்த்தை கூறி ரூ. 3,30,000/– பணத்தை பெற்று கொண்டவர்கள் எனது மகன் செந்தில் குமாருக்கு அரசு வேலை வாங்கி தரமாலும், வேலைக்காக கொடுதத பணத்தை திருப்பி தராமலும், ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணதில் தொடர்ந்து வந்ததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி தஞ்சை மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 ல் புகார் மனு கொடுத்தேன். அந்த புகாரின் அடிப்படையில் தஞ்சை மாவட்ட குற்ற பிரிவு வழக்கு பதிவுசெய்து என்னை ஆய்வாளர் விசாரணை செய்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.